

# அமரர் புலமைச்சிகரம் வே.அன்பழகன் ஞாபகார்த்தமாக

## lvinstamil.com செய்தி இணையத்தளம் நடாத்தும் தரம் 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்கள் வெளியீடும் வழிகாட்டல் கருத்தரங்கும்- 2022 [முற்றிலும் இலவசமானது]


**ஆசிரியர் திரு. எஸ். தீபன்**

**(யா/ வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை)**


சுட்டெண் : ------------------------------------------------------------------------

## வினாத்தாள் II

**பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்.**

- ❖ உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்
- ❖ மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- ❖ இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன.
- ❖ ஒவ்வொருவினாவிலும் மூன்றுவிடைகள் தரப்பட்டுள்ளன. மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.
- ❖ செய்கை வேலைக்காக ஒருதாள் வழங்கப்படும்

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| **இறுதிப்புள்ளிகள்** | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | ஒப்பம் |
|---|---|
| **முதலாவதுபரீட்சகர்**<br>புள்ளிவழங்கும் விதிமுறைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட்டதெனச் சான்று படுத்துகின்றேன். | <br>V/II/T/ |
| **இரண்டாவதுபரீட்சகர்**<br>முதலாவதுபரிசீலனையின் மதிப்பீடுசரியானதெனச் சான்றுபகிர்கின்றேன். | <br>V/II/T/ |
| **கணிதபரீட்சகர்**<br>மதிப்பீடுவழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளிசரியானதென தெரிவிக்கின்றேன் | <br>V/II/T/EMF/ |
| **பிரதமபரீட்சகர்**<br>மேற்பார்வைசெய்வதற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதெனத் தெரிவிக்கின்றேன் | <br>V/II/T/CH/ |

01. **பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

அழகை அனைவரும் விரும்புகின்றோம். நாம் வாழும் வீடு அழகாக இருக்க வேண்டும். அழகுக்கு மேலும் அழகு தருவது தொட்டிகளில் வளர்க்கப்படும் வண்ண வண்ண மீன்களே! சுறுசுறுப்பாக நீந்திச் செல்லும் மீன்கள் வற்றாத மகிழ்ச்சியை எமக்குத் தருகின்றன.

- பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) எமக்கு வற்றாத மகிழ்ச்சியைத் தருபவை எவை?

....................................................................................................................................................

(ii) 'கவின்' என்னும் சொல்லின் கருத்தினை வெளிப்படுத்தி நிற்கும் இன்னொரு சொல்லை எழுதுக.

....................................................................................................................................................

(iii) பந்தியில் வந்துள்ள 'இரட்டைக்கிளவிச் சொல்' ஒன்று எழுதுக.

....................................................................................................................................................

(iv) 'சோம்பலாக' என்னும் சொல்லின் கருத்தின் எதிர்ப்பதமாக அமையும் சொல் எது?

....................................................................................................................................................

(v) ஒற்றைக் கொம்பு, மடக்கேறு இடம்பெற்றுள்ள சொல்லை எழுதுக.

....................................................................................................................................................

(vi) தன்மைப் பன்மை நிகழ்கால வினைச் சொல் ஒன்று எழுதுக.

....................................................................................................................................................

02. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.

(i) ஒருவனது விடா ................................................... (முயச்சி, முயற்சி, முயற்ச்சி) அவனுக்கு வெற்றியை அளிக்கும்.

(ii) காலை சூரிய ............................................................ (ஒலி, ஒழி, ஒளி) ஆரோக்கியத்திற்கு வலுவூட்டுகிறது.

03. பொருத்தமான இடங்களில் நிறுத்தற் குறிகளை இடுக.

(i) மரப்பொந்துகளில் கிளிகள் வாழ்கின்றன

(ii) மரங்கொத்தி பூச்சிகள் பழங்கள் விதைகள் என்பவற்றை உண்கின்றது

04. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (✗) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

(i) அமலன் கதைப் புத்தகம் வாசித்தான். ( )

(ii) காலையில் பூக்கள் நறுமணம் வீசியது. ( )

(iii) கிளி குஞ்சுகளுக்கு உணவு ஊட்டின. ( )

(iv) காற்றினால் மரங்கள் முறிந்து வீழ்ந்தது. ( )

பெயர்: ………………………………

05. 'பேரன்' என்னும் சொல்லின் எதிர்ப்பாற் சொல்லை எழுதுக.

........................................................................................................................................

06. குதிரை வேகமாக ஓடியது. என்னும் ஒருமை வாக்கியத்தை பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.

........................................................................................................................................

07. 'நான் பூங்காவிற்குச் சென்றேன்' எனும் வாக்கியத்தை எதிர்கால வடிவில் எழுதுக.

........................................................................................................................................

08. பின்வரும் உலகநீதி அடிகளின் வெற்றிடங்களைப் பூரணப்படுத்தி எழுதுக.

(i) ஒருவரையும் ........................................................................... சொல்ல வேண்டாம்.

(ii) புண்படவே ........................................................................... சொல்ல வேண்டாம்.

09. பனையின் இளமைப் பெயரை எழுதுக.

........................................................................................................................................

10. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள பழமொழி ஆக மாற்றி எழுதுக.

வாழ்வே / குறைவற்ற / நோயற்ற / செல்வம்

........................................................................................................................................

11. பின்வரும் தொடர் மொழிக்குரிய ஒரு மொழிச் சொல்லை எழுதுக.

(i) முனிவர்கள் வசிக்கும் இடம் ………………………………………………………

(ii) கலை நிகழ்ச்சிகளை மேடையேற்றுவதற்கு முன் சரி, பிழை பார்த்துத் திருத்தும் நிகழ்வு

………………………………………………………

12. பின்வரும் இணைமொழியைப் பூர்த்தி செய்து எழுதுக.

குப்பை ……………………………………………………………..


13. புறாவின் தொனி மரபுச் சொல்லை எழுதுக,


………………………………………………………………

14. பின்வரும் மரபுச் சொல்லின் கருத்தினை எழுதுக.

ஆறப் போடுதல் ………………………………………………………………

15. பின்வரும் படங்களிற்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

(i) 

(ii) 

.............................................................. ..............................................................

16. 'நீங்கள் எங்கே வசிக்கிறீர்கள்' என்னும் வாக்கியம் ஆங்கிலத்தில் கூறப்படும் விதத்தை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

........................................................................................................................................

17. **‘மாம்பழம்’** என்பது சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழில் எழுதுக.

........................................................................................................................................................

18. ‘மட்ட பொ(த்)த தென்ன’ எனும் சிங்கள வாக்கியத்தின் கருத்தினைத் தமிழில் எழுதுக.

........................................................................................................................................................

**தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடைகளை எழுதுக.**

19. இருபத்தைந்தாயிரத்து எழுபத்து நான்கு என்னும் எண்ணை எழுதுக.

..............................................................................................


20. மதில் ஒன்றைக் கட்டுவதற்கு 5600 அரிந்த கற்கள் தேவை எனக் கணக்கிடப்பட்டிருந்தது. தற்போது 953 அரிந்த கற்கள் உள்ளன. எனின், இன்னும் தேவையான கற்களின் எண்ணிக்கை யாது?

..............................................................................................

21. vii - iii  இச் செய்கையின் பெறுமானத்தை உரோம எண்ணிலேயே எழுதுக.

..............................................................................................

22.



இவ் உருவை அவதானித்து விடை எழுதுக.

(i) நிழற்றப்படாத பகுதியைப் பின்னத்தில் எழுதுக.

..............................................................................................

(ii) நிழற்றப்பட்ட பகுதியை தசம எண்ணின் பெயராக எழுதுக.


..............................................................................................

23. பின்வரும் எண் ஒழுங்கை அவதானித்து அடுத்து வரும் எண்ணை எழுதுக.

(i) **1, 4, 9, 25,** ..................................................

(ii) **5, 10, 30, 120,** ..................................................

24




படத்தில் A பாத்திரத்தை நிரப்ப B பாத்திரத்தால் ஐந்து தடவைகள் நீர் ஊற்றப்பட்டது. பின்னர் எஞ்சிய பகுதியை நிரப்ப C பாத்திரத்தினால் எத்தனை தடவைகள் நீர் ஊற்ற வேண்டும்.

..............................................................................................

25. 250$g$ அரிசியின் விலை ரூபா 28.50 ஆக இருந்தது. எனின், $1\frac{3}{4}\ kg$ அரிசியின் விலை யாது?

.ரூபா ..............................................................................

26.




படத்தில் சென்ரிமீற்றர் அளவு கோலின்படி பென்சிலின் நீளத்தை மில்லிமீற்றரில் எழுதுக.

............................................................ .மில்லிமீற்றர்


27. பிஸ்கட் பைக்கற் ஒன்றின் நிறை *1kg 50g* ஆக குறிக்கப்பட்டிருந்தது. எனின், 5 பிஸ்கட் பைக்கற்றுக்களின் நிறை யாது?

.................................. *kg* ................................ *g*

28. 3 லீற்றர் அளவுடைய குளிர்பானம் 6 பேரிடையே சமனாகப் பங்கிட்டு வழங்கப்பட்டது. எனின், ஒருவருக்குக் கிடைக்கும் குளிர்பானத்தின் அளவை லீற்றரில் எழுதுக.

.................................................................. லீற்றர்

29.




இவ் தள உருக்களைக் கொண்டு உருவாக்கக் கூடிய திண்ம உருவின் பெயர் யாது?

....................................................................................

30. பாடசாலை ஒன்றில் இருந்து 50 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி இருந்தனர். வகுப்பறை ஒன்றில் 16 மாணவர்கள் மட்டுமே ஆகக் கூடுதலாக அமர்ந்து பரீட்சை எழுத முடியும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது. எனின், இப்பாடசாலை மாணவர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட வேண்டிய வகுப்பறைகளின் எண்ணிக்கை யாது?

....................................................................................

31.





ஒருவர் A எனும் இடத்தில் இருந்து மேற்கு நோக்கி 4 கட்ட நீளம் பயணம் செய்து, பின் வடக்கு நோக்கி 3 கட்டங்கள் பயணம் செய்து, பின் அங்கிருந்து கிழக்கு நோக்கி 1 கட்ட நீளம் பயணத்தை மேற்கொண்டு தன் இடத்தை அடைந்தார். எனின், அவர் பயணத்தை ஆரம்பித்த இடம் தற்போது உள்ள இடத்திற்கு எத்திசையில் உள்ளது.

....................................................................................

32. வகுப்பு ஒன்றில் உள்ள மாணவர்கள் விரும்பும் மலர்கள் அட்டவணையிலும், வரைபிலும் காட்டப்பட்டுள்ளது.

| மலர்கள் | எண்ணிக்கை |
|---|---|
| மல்லிகை | 8 |
| அந்தூரியம் | ............ |
| செவ்வரத்தை | 12 |
| தாமரை | 9 |




(i) அட்டவணையையும் வரைபையும் பூரணப்படுத்துக

(ii) மலர்களை விரும்பும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

....................................................................................

33. 4635, 5005, 4365, 4653 ஆகிய எண்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதும் போது மூன்றாவதாக வரும் எண் யாது?

..............................................................................................

- **இலக்கம் 34 தொடக்கம் 63 வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

34. 'எனது வகுப்பிற்கும் பாடசாலைக்கும் நான் ஓர் ஒளிவிளக்காவேன்' என்பது உடல், உளச் சுகத்திற்கான செயற்பாட்டின் படிமுறையின் பெயர்

(1) பிரார்த்தனை (2) உதிப்பு (3). திடசித்தம்

35. இலங்கையின் அரச இலச்சினையில் நிறைகுடம் குறித்து நிற்பது

(1) சௌபாக்கியமும் பொலிவும்
(2) தன்னிறைவும் செழிப்பும்
(3). நித்திய நிலைத்திருப்பு

36. இலங்கையின் தேசிய மலராக அமைவது.

(1) அல்லி (2) தாமரை (3) நீலோற்பலம்

37. ஒருவர் தனது வதிவிடத்தை உறுதிப்படுத்தவும், நன்னடத்தைச் சான்றிதழைப் பெறவும் செல்ல வேண்டியது.

(1) பிரதேச செயலகம்
(2) கிராமசேவகர் அலுவலகம்
(3) மாவட்டச் செயலகம்

38. பூக்களின் மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் பிராணி அல்லாதது.

(1) வண்ணத்துப்பூச்சி (2) தேனீ (3) நத்தை

39. உணவாகப் பயன்படும் பூ வகை அல்லாதது.

(1) தென்னை (2) வாழை (3) அகத்தி

40. இலைகளைக் கீழ்ப்புறமாகச் சுருட்டி கூடு அமைக்கும் பிராணி

(1) தேன்சிட்டு (2) பச்சிலைப்பூச்சி (3) செவ்வெறும்பு

41. கொல்லன் பட்டறையில் நெருப்பு எரிவதற்குரிய காற்றை வழங்குவது.

(1) சுளகு (2) ஊதுகுழல் (3) துருத்தி

42. பின்வரும் பொதி செய்யப்பட்ட உணவில் குறைந்த பாவனைக் காலத்தைக் கொண்ட உணவு

(1) பால்மா பைக்கற் (2) யோக்கட் (3) மீன்ரின்

43 ஈர மண்ணினுள் புதைத்து வைப்பதன் மூலம் குறித்த சில நாட்களுக்குப் பாதுகாக்கப்படும் உணவு அல்லாதது.

(1) முருங்கைக்காய் (2) தேசிக்காய் (3) கத்தரிக்காய்

44. சரியான மெய்ந்நிலையில் (கொண்ணிலை) நடக்கும் ஒருவரது பாதணியின் அடிப்பாகம் தேய்வடைந் திருக்கும் விதம்

(1) பாதணியின் முன்பகுதி தேய்வடைதல்

(2) பாதணியின் பின்பகுதி தேய்வடைதல்

(3) பாதணி சமச்சீராகத் தேய்வடைதல்

45. உடல் வளர்ச்சி, நோயில் இருந்து பாதுகாப்பு என்பவற்றிற்குத் தேவையான உணவுகள் முறையே

(1) மீன், உருளைக்கிழங்கு
(2) பருப்பு, வாழைப்பழம்
(3) சோறு, கீரை

46. உணவைத் தயார் செய்யும் போது சுயசுத்தம் மற்றும் உணவின் சுத்தம் ஆகியவற்றைப் பேணுவதற்கு அணியப்படுவது.

(1) மேல்சட்டை (2) ஏப்ரன் (3) புடைவை

47. உணவின் பிரதான சுவையூட்டிப் பொருள்

(1) கறிவேப்பிலை (2) சீனி (3) உப்பு

48. சிவப்பு நிறத்துடன் மஞ்சள் நிறத்தைக் கலப்பதால் உண்டாகும் நிறம்.

(1) செம்மஞ்சள் (2) பச்சை (3) ஊதா

49. நீர் மாசடையும் வழிவகை அல்லாதது.

(1) இரசாயனப் பசளைகள் நீருடன் சேருதல்.

(2) உக்கும் தன்மை கொண்ட பொருட்களை மண்ணினுள் புதைத்தல்.

(3) மனித, விலங்குக் கழிவுகள் நீரில் சேருதல்.

50. வீதியில் நடந்து செல்லும் போது பொருத்தமான செயற்பாடாக அமையாதது.

(1) வீதியின் இடது பக்கமாக நடந்து செல்லல்.

(2) ஒருவர் பின் ஒருவராக நடந்து செல்லல்.

(3) வீதியின் வலது பக்கமாக நடந்து செல்லல்.

51. உணவு சமைக்கும் போது திறந்த நிலையில் சமைக்கப்படும் உணவு வகை

(1) கீரை (2) மரவள்ளி (3) பருப்பு

52. கோடை காலங்களில் தாகத்தைத் தீர்த்துக் கொள்ள உண்ணப்படும் நீர்த்தன்மை கொண்ட பழவகை அல்லாதது.

(1) வத்தகை (2) வெள்ளரி (3) வாழை

53. விவசாய நிலங்களில் அதிகளவு பயன்பாட்டிற்குக் கையாளப்படும் உபகரணம்

(1) பரப்புப்பலகை (2) மண்வெட்டி (3) கலப்பை

54. ஆணிகளைக் கழற்றவும், அறையவும் பொருத்தமான கருவி

(1) திருகாணி செலுத்தி (2) உளி (3) சுத்தியல்

55. மண்ணினுள் வளி ஊட்டத்தை அதிகரிக்கும் உயிரினம்

(1) கறையான் (2) தவளை (3) மண்புழு

56. தேசப்படங்களில் பிரதானவீதியைக் குறித்துக் காட்டப் பயன்படுத்தப்படும் நியம நிறம்

(1) சிவப்பு (2) மஞ்சள் (3) கறுப்பு

57. விசேட பாதை ஊடாகப் பயணம் செய்யும் போக்குவரத்துச் சாதனம்

(1) பேருந்து (2) கப்பல் (3) புகையிரதம்

58. தபாலகத்தில் உள்நாட்டுத் தபால்களைச் சேர்ப்பிக்கும் பெட்டியின் நிறம்

(1) நீலம் (2) சிவப்பு (3) பச்சை

59. தண்டின் மூலம் புதிய கன்றுகளை உருவாக்காத தாவர இனம்

(1) வத்தாளை (2) பசளி (3) கீரை

60. A9 பிரதான வீதி இணைக்கும் இரு நகரங்களும்

(1) கொழும்பு - யாழ்ப்பாணம் (2) யாழ்ப்பாணம் - கண்டி (3) கண்டி - கொழும்பு

61. 'நாகணவாய்' என அழைக்கப்படும் பறவை இனம்

(1) மயில் (2) புளுனி (3) மைனா

62. 'சிறுவர் துஸ்பிரயோகம்' தொடர்பாக அறிவிக்க வேண்டிய அவசர தொலைபேசி இலக்கம்

1. 1929 (2) 1919 (3) 1954

63. 'சர்வ கரைப்பான்' என அழைக்கப்படும் திரவம்

1. மண்ணெய் (2) பால் (3) நீர்

64. தாவரங்கள் எமக்கு உயிர்வாழ அத்தியாவசியமான தூய காற்றைத் தருகின்றது. தாவரங்கள் இல்லாவிடில் இப்பூமியில் உயிரினங்கள் வாழும் நிலை அற்றுப்போய்விடும். "நாம் தாவரங்களைப் பாதுகாப்போம்" என்னும் தலைப்பில் ஐந்து சொற்களுக்குக் குறையாத மூன்று வாக்கியங்களைப் பொருத்தமான எழுவாய், பயனிலைத் தொடர்புகளுக்கு அமைய எழுதுக.

(i) ..........................................................................................................

..........................................................................................................

(ii) ..........................................................................................................

..........................................................................................................

(iii) ..........................................................................................................

..........................................................................................................